தமிழக முற்போக்கு மக்கள் கட்சி
தலைமையகம் : 57/5 , அன்னை வேளாங்கண்ணி மாதா கோவில் தெரு, வண்ணான் துறை, சென்னை 600090.
இணையதளம் : www.tmmkatchi.com. மின்னஞ்சல் : tmmkatchi@gmail.com
93450 99448 Visit: www.tmmkatchi.com / YouTube @tmmkatchi-315

**க.சக்திவேல்.**

**தலைவர்.**

**I-7-2023**

**பத்திரிக்கை செய்தி**

**தக்காளி விலை உயர்வை தடுக்காமல்**

**போகாத ஊருக்கு வழி தேடுகிறது மத்திய அரசு.**

**தமிழக முற்போக்கு மக்கள் கட்சித் தலைவர் க.சக்திவேல் கண்டனம்.**

கடந்த சில வாரங்களாக தக்காளி விலை உயர்வு இந்தியா முழுவதும் உச்சத்தை அடைந்ததுள்ளது. அது மட்டும் இன்றி, தக்காளியினுடைய வரத்து குறைவாக இருப்பதால் தட்டுப்பாடும் அதிகமாக நிலவி வருகிறது.

ஒரு மாநிலத்தில் மட்டும் இத்தகைய நிலை என்றால் மாநில அரசு தக்காளி விலை உயர்வை தடுக்க தவறிவிட்டதாக சொல்லலாம். ஆனால் இந்தியா முழுவதும் ஒரு சேர தக்காளி தட்டுப்பாடும் விலை உயர்வும் இருக்கக் கூடிய காரணத்தால், மத்திய அரசுதான் இதற்கான உரிய முயற்சிகளை மேற்கொண்டு தக்காளி அதிக அளவில் கிடைப்பதற்கும் விலை குறைவிற்கும் வழிவகை காண வேண்டும். எந்தெந்த மாநிலங்களில் தக்காளியின் விளைச்சல் அதிகமாக இருக்கிறதோ அந்த மாநிலங்களில் இருந்து பற்றாக்குறை மாநிலங்களில் அதிக அளவில் தக்காளி கிடைப்பதற்கான வழிமுறைகளை மத்திய அரசு உடனடியாக காண வேண்டும்.

ஆனால் இத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளாமல் வருகிற வெள்ளிக்கிழமை அன்று தக்காளி விலையை குறைப்பதற்கான கருத்துக்களை பொது மக்களிடம் கேட்டு முடிவு எடுக்கப் போவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. தாங்கள் ஆற்ற வேண்டிய கடமையை உதறி தள்ளிவிட்டு மேம்போக்காக பொதுமக்களிடம் கருத்துக்களைக் கேட்போம் என்பது போகாத ஊருக்கு வழி கேட்கும் வேலை தான்.

# தமிழக முற்போக்கு மக்கள் கட்சி

தலைமையகம் : 57/5 , அன்னை வேளாங்கண்ணி மாதா கோவில் தெரு, வண்ணான் துறை, சென்னை 600090.
இணையதளம் : www.tmmkatchi.com. மின்னஞ்சல் : tmmkatchi@gmail.com
93450 99448 Visit: www.tmmkatchi.com / YouTube @tmmkatchi-315


---

**க.சக்திவேல்.**

**தலைவர்.**



உணவு பொருட்கள், காய்கறிகள் உற்பத்தி ஆகியவற்றைப் பற்றி அறிந்த வேளாண் துறை அறிஞர்கள், துறை வல்லுநர்களை வைத்துக் கொண்டிருக்க கூடிய மத்திய அரசு இதற்கான அறிவுரையை கேட்டு உடனடியாக செயல்பட்டு இருக்க வேண்டும். தக்காளி உற்பத்தி ஒருபுறம் , அப்படி அதிகப்படியான தக்காளி உற்பத்தியான மாநிலங்களில் இருந்து பிற மாநிலங்களுக்கு விரைந்து செல்வதற்கான போக்குவரத்து ஏற்பாடுகளை செய்வது,தக்காளியை பதுக்குகிற பேர்வழிகளை கண்டறிந்து பதுக்கல் நடவடிக்கைகளை தடுப்பது இத்தகைய செயல்கள் மூலம் மட்டுமே மத்திய அரசு நாடு முழுவதும் தக்காளியின் விலையை குறைப்பதுடன் தக்காளி தட்டுப்பாடை நீக்குவதற்கான வழிமுறைகளை காணலாம்.

அதை விடுத்து விட்டு பொதுமக்களிடம் கருத்து கேட்பது போகாத ஊருக்கு வழி கேட்கும் செயல் தான். பொதுமக்களிடம் கருத்து கேட்பதால் எந்த விதமான நன்மையும் நடைபெறப் போவதில்லை மாறாக மத்திய அரசு கண் துடைப்பு வேலையை தான் செய்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது.

எனவே, உடனடியாக மத்திய அரசு தக்காளி அதிக அளவில் உற்பத்தி செய்யக்கூடிய மாநிலங்களில் இருந்து அதிக உற்பத்தி இல்லாத மாநிலங்களில் கிடைப்பதற்கான உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டுமெனவும் ஒரு சீரான தக்காளி உற்பத்தி விநியோகத்திற்கும் மத்திய அரசு வழி வகை காண வேண்டுமென தமிழக முற்போக்கு மக்கள் கட்சி மத்திய அரசை வலியுறுத்துகிறது.

**க.சக்திவேல்.**